# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg


| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |


| 31 மார்ச் 2019 | தவக்காலம் நான்காம் ஞாயிறு | மூன்றாம் ஆண்டு |
|---|---|---|



# உங்கள் சிந்தனைக்கு…

இயேசுவிற்கு மிகவும் நெருக்கமானவர்களே! தவக்காலத்தின் நான்காம் ஞாயிறுத் திருப்பலியைக் கொண்டாட வந்துள்ள அனைவருக்கும் அன்பு வாழ்த்துக்கள்.
முதல் வாசகத்தில் மகிழ்ச்சியானது பாஸ்காக் கொண்டாட்டமாகவும், இரண்டாம் வாசகத்தில் ஒப்புரவாகவும், நற்செய்தி வாசகத்தில் இல்லம் திரும்புவதாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது. என்னை நோக்கி நான் திரும்பினாலே, இறைவனை மற்றும் பிறரை நோக்கிய திருப்பம் சாத்தியமாகிவிடும். ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு அன்புடனும் நட்புடனும் வாழ முற்படும் போதுதான் நாம் நம் மனமாற்றத்தின் நிறைவைக் காண்கிறோம்.

இரண்டாம் வாசகத்தில், திருத்தூதரின் பணி என்பது ஒப்புரவாக்கும் பணி என்று கொரிந்து நகரத் திருச்சபைக்கு மனம் திறக்கும் பவுலடியார், அந்த ஒப்புரவு என்றால் என்ன? அந்த ஒப்புரவுப் பணியில் மக்கள் மற்றும் தன் பங்கேற்பு என்ன? என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். தடைபட்ட உறவு மீண்டும் சரிசெய்யப்படுவதே ஒப்புரவு. கடவுள் தன் கொடையாக ஒப்புரவை நமக்கு வழங்கினாலும், அந்த ஒப்புரவிற்கு நம்மையே நாம்தான் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும். ஒப்புரவை அன்றாடம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்கிறார் தூய பவுல்.

இழந்த உறவை மீண்டும் சரிசெய்யவே இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு வந்தார். கடுமையான நம் வார்த்தைகள் எத்தனை உறவுகளை முறித்திருக்கின்றன எனச் சிந்திப்போம். முறிந்த உறவுகள் மீண்டும் இணையும்போது அங்கே இறைவனின் பிரசன்னமும் தோன்றுகிறது. ஏனென்றால் அன்பு எங்கே உள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றார் என்பதை உணர்ந்திடுவோம். இந்தத் தவக்காலம் நம்மில் வீழ்ந்துக் கிடக்கும் சுயநலம், பாவம் போன்ற ஆன்ம அழுக்குகளை அப்புறப்படுத்த அருமையான வாய்ப்பாக அமைந்துள்ளது. நம்மிலே மனமாற்றம் காணவும், அடுத்தவரின் மனமாற்றத்தை ஏற்று மகிழும் நல்ல உள்ளத்தை நமக்குத் தர வேண்டியும் இத்திருப்பலியில் முழுமனதோடு பங்கேற்போம்.

## புனித வார வழிபாடுகள் மற்றும் திருப்பலி நேரங்கள்




**குருத்தோலை ஞாயிறு (14-04-2019):**
காலை 9:00 மணி மற்றும் மாலை 6 மணி (தமிழ்)

**பெரிய வியாழன் (18-04-2019):**
இரவு 8 மணிக்கு **ஆங்கிலம் மற்றும் தமிழ்** கலப்புத் திருப்பலி நடைபெறும்.

**திருப்பாடுகளின் வெள்ளி (19-04-2019):**
மதியம் 2:30 மணிக்கு சிலுவைப்பாதை, தொடர்ந்து திருச்சடங்குகள். **(ஆங்கிலம்)**
மாலை 6 மணிக்குத் திருச்சடங்குகள், தொடர்ந்து சிலுவைப்பாதை. **(தமிழ்)**

**பெரிய சனிக்கிழமை (20-04-2019):** உயிர்ப்புப் பெருவிழா திருவிழிப்பு திருப்பலி
இரவு 7:30 மணி **(ஆங்கிலம்),** இரவு 11:30 மணி **(தமிழ்)**



**உயிர்ப்பு ஞாயிறு (21-04-2019):**
காலை 7:30, 11:30 மற்றும் மதியம் 1 மணி **(ஆங்கிலம்)**
காலை 9:30 மணி மற்றும் மாலை 6:30 மணி **(தமிழ்)**

## சிலுவைப்பாதை பக்தி முயற்சி



நமது தூய லூர்து அன்னை ஆலயத்தில், தவக்காலத்தின் **ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் இரவு 8 மணிக்குத் தமிழில்** சிலுவைப் பாதையும், அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும். இயேசுவின் சிலுவைப் பாடுகளைத் தியானித்து, உள்ளத்தில் மாற்றம் பெற்று தவக்காலத்தை அர்த்தமுள்ள விதத்தில் அனுசரிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

## தவக்கால ஒப்புரவு அருட்சாதனம்



நமது ஆலயத்தில், வருகின்ற 07-04-2019 ஞாயிற்றுக் கிழமை தமிழில் திருப்பலிக்கு முன்னதாக ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்படும்.

**நேரம்:** காலை 8:45 முதல் 9:30 வரை மற்றும்
மாலை 5:30 முதல் 6:30 வரை.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாவமன்னிப்பு அருட்சாதனம் மூலம் இறையருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக "Church of Our Lady of Lourdes" என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் "Building Fund" என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்



பள்ளி விடுமுறை காரணமாக நிறுத்தப் பட்டிருந்த தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள் இன்றுமுதல் (31-03-2019) மீண்டும் ஆரம்பமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில் இரவு 8:30** மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!



| ஞாயிறு வாசகங்கள் | | |
|---|---|---|
|  | **முதலாம் வாசகம்:** | யோசுவா 5:9,10-12 |
| | **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 34: 1-2. 3-4. 5-6 |
| | **பதிலுரை:** | ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள். |
| | **இரண்டாம் வாசகம்:** | 2 கொரிந்தியர் 5:17-21 |
| | **வாழ்த்தொலி:** | நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், 'அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்' என்று அவரிடம் சொல்வேன். |
| | **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 15:1-3, 11-32 |

| ஆலயத் திருப்பலி நேரங்கள் | | |
|---|---|---|
|  | வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| | சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| | ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| | ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| | பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

| ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள் | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

